# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் **2020–**ம் வருடம் **ஆகஸ்ட் மாதம் 28.08.2020 –ம்** தேதி காலை **11.30** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது அக்கூட்ட நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு.

அக்கூட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் – திரு . பெர்பெற்றி டெரன்ஸ் லியோன்,M.Sc.,
ஆணையாளர்(ம) தனி அலுவலர்

## <u>பொருட்கள்</u>

1) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் - 19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போக்கால அடிப்படையில் மேற்கொள்ள கபசுர குடிநீர், நிலவேம்பு குடிநீர் மற்றும் தேவையான தடுப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு அனுமதிக்கும், அதற்காகும் உத்தேச செலவீன தொகை ரூ. 100000/- க்கு மன்றத்திற்கு பொருள் வைக்க அனுமதிக்கும் மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆயைளர் முன் அனுமதி பெற்று தற்போதைய அவசர தேவைக்காக Tampcol, Chennai நிறுவனத்திடமிருந்து விநியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு</u>**

1. தோராய செலவு ரூ. 100000/- மன்றம் அங்கீகரிக்கவும்.
2. பொது சுகாதார நலன் கருதி மேற்படி அரசு அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு நேரடியாக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கவும்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1686, நாள்.28.08.2020.</u>**
**அங்கீகரிக்கப்படுகிறது.**

2) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் - 19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போக்கால அடிப்படையில் மேற்கொள்ள தேவையான கிருமி நாசினி பொருட்கள் வாங்குவதற்கு அனுமதிக்கும் அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ. 170000/-(Rupees One lakh seventy thousand) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையாளர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.கு</u>**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி செலவீனத்திற்கு அனுமதிக்கும் தனி அலுவலர்/ஆணையாளர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 365/2020/அ2.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1687, நாள்.28.08.2020.</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**

3)திடக்கழிவு மேலாண்மை திட்டம் **IUDM 2018-2019** ன் கிழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட மருந்துக்கோட்டை உரக்கிடங்கு பகுதியில் கசடு கழிவு நீர் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை அமைத்தல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகோரும் அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை , சென்னை வாயிலாக மாநில அளவிலான தினசரி நாளிதழ் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) (ம) மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் **Ravi Publicity Service,Chennai** என்ற நிறுவனதாரர் மூலம் பிரசுரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பிரசுரம் செய்யப்பட்ட தேதி | அளவு | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | DECCAN CHRONICLE-TAMILNADU | 30/05/2019 | 10(W)x 5H | 34650.00 |
| 2. | THE HINDU-TAMILNADU | 30/05/2019 | 10(W) x 5H | 38700.00 |
| **Total** | | | | 73350.00 |
| **SGST 2.5%** | | | | 1833.75 |
| **CGST 2.5%** | | | | 1833.75 |
| **Grand Total** | | | | 77018.00 |

மேற்கண்ட பட்டியலின் படி தொகை ரூ. 77018.00 ஐ **Ravi Publicity Service Chennai** அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 120/2019/இ1)**

**மன்றத் தீர்மானம் எண். 1688, நாள்.28.08.2020.**

**அங்கீகரிக்கபப்பட்டது.**

4)திடக்கழிவு மேலாண்மை திட்டம்(**SWM) 2018-2019** ன் கிழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் 59 துப்புரவு பணியாளர்கள் ஒப்படைப்பு செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகோரும் அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை , சென்னை வாயிலாக மாநில அளவிலான தினசரி நாளிதழ் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) (ம) மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் **Ravi Publicity Service,Chennai** என்ற நிறுவனதாரர் மூலம் பிரசுரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்** | **நாளிதழ் பெயர்** | **பிரசுரம் செய்யப்பட்ட தேதி** | **அளவு** | **தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1. | The New Indian Express-Tamilnadu | 13/12/2018 | 10(W)x 5H | 48750.00 |
| 2. | Makkal kural – Tamilnadu | 13/12/2018 | 10(W) x 5H | 33750.00 |
| **Total** | | | | 82500.00 |
| **SGST 2.5%** | | | | 2062.50 |

| | |
|---|---|
| **CGST 2.5%** | **2062.50** |
| **Grand Total** | **86625.00** |

மேற்கண்ட பட்டியலின் படி தொகை ரூ.86625.00 ஐ Ravi Publicity Service Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2047/2018/இ1)**

**<u>மன்றத் தீர்மானம் எண். 1689, நாள்.28.08.2020.</u>**
**அங்கீகரிக்கபப்பட்டது.**

5) பொது மேலாளர், ஆவின், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், நாகர்கோவில் நிறுவனத்தின் கடிதத்தில் பத்மனாபபுரம் நகராட்சிக்கு சொந்தமான தக்கலை பகுதியில் பொதுப்பணித்துறை அலுவலகத்தின் அருகில் உள்ள கடை எண்-8-ஐ ஆவின் பாலகம் அமைத்து பால் பொருட்கள் விற்பனை செய்திடவும் அதற்கான உரிய வாடகை தொகையினை செலுத்திட தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தக்கலை பழைய பேருந்து நிலைய டவுண்ஹால் கடை எண் - 8 தற்போது காலியாகவே உள்ளது. மேற்படி கடையினை 7 முறை மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வரவில்லை. மேற்படி கடையின் பழைய வாடகை ரூ.6745/- ஆகும். ஆவின் நிறுவனம் அரசு சார்பு நிறுவனம் என்பதால் பொது ஏலம் தவிர்த்து விதிமுறைகளை தளர்வு செய்து வைப்புத்தொகை செலுத்துவதில் இருந்து விலக்களித்து மூன்று மாத வாடகையினை முன்பணமாக செலுத்தவும், அரசு வழிகாட்டுதல்படி தற்போதைய சந்தை மதிப்பு ரூ.9000/- என மாத வாடகை நிர்ணயம் செய்தும் (அதற்கான G.S.T. செலுத்தப்பட வேண்டும்). 2020-2021-ம் ஆண்டு பொது ஏலம் மற்றும் குத்தகை ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின் படி உரிய நிபந்தைனைகளுடன் தக்கலை பழைய பேருந்து நிலைய கடை எண் - 8-ஐ பொது மேலாளர் ஆவின், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், நாகர்கோவில் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்.783/2020/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1690, நாள்.28.08.2020.</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**

6) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளின் திருத்தியமைக்கப்பட்ட வார்டு எல்லைகள் மற்றும் தெருக்களை உள்ளடக்கிய புதிய வரைபடம் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021-க்கு தேவைப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ. 96000/-(ருபாய் தொண்ணுற்றாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அ.கு- மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.746/2020/TPI)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1691, நாள்.28.08.2020.</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**

7) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10, கதவு எண் 22/51 A என்ற எண் கொண்ட திரு. பக்ருதீன் என்பவரின் குடியிருப்பிற்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு வணிக பயன்பாட்டில் உள்ளது. வருவாய் ஆய்வாளரின் அறிக்கையில் மேற்படி குடிநீர் இணைப்பு வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்கண்ட குடியிருப்பு பயன்பாடாக இருந்து வருவதால் குடிநீர் இணைப்பு வரிவிதிப்பினை வணிக உபயோக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு உபயோக இணைப்பாக மாற்றம் செய்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1596/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1692, நாள்.28.08.2020.</u>**
**அங்கிகரிக்கப்பட்டது.**

8) இந்நகராட்சிக்கு தேவையான மார்ச் 2021 வரைக்கும் தேவையான TONER கள் வாங்குவதற்கு உள்ளூர் மற்றும் வெளியர் விநியோகஸ்தர்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 100000/- நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக.

(ந.க.எண். 1982/2018/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1693, நாள்.28.08.2020.</u>**
**அங்கிகரிக்கப்பட்டது**

9) இந்நகராட்சி அலுவலகத்தில் தீ விபத்து ஏற்படாத வண்ணமும், சுகாதார கேடு ஏற்படாத வகையில் போர்க்கால அடிப்படையில் தீ அணைக்கும் கருவி பொருத்தப்பட்டது.

மேற்கண்ட தீ அணைக்கும் கருவி பொருத்தப்பட்டு ஓராண்டு காலம் கடந்த நிலையில் அதற்கு REFILL SERVICE செய்யப்பட்டது. அதன்படி REFILL SERVICE

செய்யப்பட்ட வகையில் தொகை ரூ. 2850/- ஐ நிறுவனதார்ர் Arasu Fire Service, Tirunelveli அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 529/2019/இ1.

**மன்றத் தீர்மானம் எண். 1694, நாள்.28.08.2020.**
**அங்கிகரிக்கப்பட்டது**

10) இந்நகராட்சிக்குட்பட்ட மருந்துக்கோட்டை உரக்கிடங்கு பகுதியில் எரிவாயு தகன மேடை (Gasifier Crematorium ) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இருக்கும் பகுதியில் மண்ணின் தன்மையை ( **SOIL TEST REPORT** ) ஆய்வு செய்து அதற்கான சான்று பெறவும் மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்ள **STRUCTURAL DESIGN** பெறவும் முதல்வர், அரசு பொறியியல் கல்லுரி ,திருநெல்வேலி அவர்களுக்கு 20.03.2020 அன்று கடிதம் அனுப்பபட்டது.

அதன்படி முதல்வர், அரசு பொறியியல் கல்லுரி ,திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் **20/GCE/CIVIL /CONSULTANCY /2020** . நாள் **18.6.2020** ன் படி விலைப்பட்டியல் வரப்பெற்று அதற்கான தொகை ரூ.21240/- னை வங்கி வரைவோலையாக (**வரைவோலை எண்122619530, நாள்.15.07.2020) இவ்வலுவலக கடிதம் மூலம் அனுப்பபட்டது. மேற்படி** எரிவாயு தகன மேடை (Gasifier Crematorium ) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இருக்கும் பகுதியில் மண்ணின் தன்மையை ஆய்வு செய்து அதற்கான அறிக்கையினை ( **SOIL TEST REPORT** ) முதல்வர், அரசு பொறியியல் கல்லுரி ,திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் **20/GCE/CIVIL /CONSULTANCY /2020** . நாள் **07.08.2020** ன் படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட பகுதியில் **STRUCTURAL DESIGN** தயார் செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தினையும் முதல்வர், அரசு பொறியியல் கல்லுரி ,திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் **20/GCE/CIVIL /CONSULTANCY /2020** . நாள் 10.**08.2020** ன் படி இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி **STRUCTURAL DESIGN** மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டமைக்கும் முதல்வர், அரசு பொறியியல் கல்லுரி ,திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் **20/GCE/CIVIL /CONSULTANCY /2020** . நாள் **07.08.2020** ன் படி கீழ்க்கண்ட விபரப்படி விலை விபரக்குறிப்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

## PROFORMA INVOICE

| | | |
|---|---|---|
| **Name of the Party** | : | The Commissioner Padmanabhapuram Municipality. |
| **Nature of Consultancy** | : | Structural Design and Drawing for the Construction of Gasfier Crematorium at Marunthukootai compost yard of Padmanabhapuram Municipality. . |
| **Consultancy Chagres** | : | Total - Rs.10620/- For Three Locations (Rs.9000/-+GST Rs .1620/- |

மேற்கண்ட விபரப்படி STRUCTURAL DESIGN மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டமைக்கான தொகை ரூ.10620/- னை முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி ,திருநெல்வேலி என்ற பெயரில் வங்கி வரைவோலையாக தயார் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண் 775/2019/இ1)**

**அ.கு**;- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 1695, நாள்.28.08.2020.**
**அனுமதிக்கப்பட்டது.**

11) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழக அரசின் மூலம் 2017-2018 மற்றும் 2018-2019 - ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகளான ஈராண்டு சாதனைகளை மக்களை சென்றடையும் வகையில் தினகரன் நாளிதழில் சாதனை மலரில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு KAL PUBLICATIONS , Ngl. என்ற நிறுவனதாரரிடமிருந்து கீழ்க்கண்டவாறு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பட்டியல் எண் /நாள் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 3300147480, 07.03.2019. | தினகரன் , நாகர்கோவில் | 9500/- |
| | | SGST @2.50 % | 237.50 |
| | | CGST @2.50 % | 237.50 |
| | | **TOTAL** | **9975.00** |

மேற்கண்ட விபரப்படி தொகை **ரூ.9975/- ஐ KAL PUBLICATIONS , Ngl**. என்ற நிறுவனதார்ருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1696, நாள்.28.08.2020.</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**

12)இந்நகராட்சியில் 2019-2020 - ஆம் ஆண்டு தணிக்கை ஆய்வு நடை பெற இருப்பதால் 2019-2020 - ஆம் ஆண்டுக்கான **Water Supply demand Regiester Arrear** மற்றும் **Current Regiester** தயார் செய்ய வேண்டியுள்ளது.

அதன் படி இந்நகராட்சி அலுவலகத்தில் உபயோகபடுத்தி வரும் ஒளி நகல் இயந்திரம் **( XEROX MACHINE** ) பழுதடைந்த காரணத்தினால் பிரிண்டர் எடுக்க இயலாத நிலையில் உள்ளது .மேலும் மேற்கண்ட Water Supply demand Regiester Arrear மற்றும் Current Regiester ஆகியவை சுமார் 2500 பக்கங்கள் கொண்டதால் அவசரம் அவசியம் கருதி வெளியில் எடுத்தமைக்குண்டான செலவினம் ரூ.1492/- ஆகும். மேற்கண்ட செலவினம் இவ்வலுவலக இளநிலை உதவியாளர் திரு. கண்ணன் அவர்களால் வழங்கப்பட்டது.

எனவே மேற்கண்ட செலவினத்தொகை ரூ.1492/- ஐ திரு. கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 1275/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1697, நாள்.28.08.2020.</u>**
**அனுமதிக்கப்படுகிறது.**